DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.102/2026

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | பாப்பம்மாள் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 30.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், தேவனூர்நாடு, பெரும்பரப்புபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன்.

ஆஜர் எதிரியை தெரியும், வழக்கை பற்றி எதுவும் தெரியாது. புகார் வாக்குமூலத்தில் உள்ள முதல் கைரேகை என்னுடையதுதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது. **(**புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை மட்டும் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது ஆஜர் எதிரி சின்னசாமிக்கும் எங்களுக்கும் ஏற்கனவே சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருவதாகவும், கடந்த 27.04.2024ம் தேதி காலை 11.00 மணிக்கு எனது கணவர் எதிரியின் மனைவி

சங்கீதாவிடமும், அவரது தந்தை காளியிடமும் எங்களது தோட்டத்தில் எதிரியின் ஆடு, மாடுகள் மேய்ந்து வருவது குறித்து கண்டித்ததாகவும், அன்றைய தினமே மதியம் 02.20 மணிக்கு நானும் எனது கணவரும் எனது கொள்ளு பேத்தி பொண்ணுலேகாஸ்ரீயுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தபேது எதிரி அங்கு தென்னை மட்டையுடன் வந்து எங்களை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தென்னை மட்டையால் எனது கணவரை தலையிலும், உடலிலும் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்பு எனது கணவரை பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக முன்னுக்கு பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சமாதானமாக சென்றுவிட்டோம். சமரச மனுவில் உள்ள முதல் கைரேகை என்னுடையதுதான். **(**சமரச மனு அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**